CPA

CENTRE FOR POLICY ALTERNATIVES

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

## Unframed புகைப்படக் கண்காட்சியை பேராதனை பல்கலைக்கழகத்தில் தடை செய்வதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கண்டிக்கின்றது

**18 ஒக்டோபர் 2018 இலங்கை, கொழும்பு:**

Unframed என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிங்கள ஊடக தளமான விகல்பவினால் ஏற்பாடு செய்யப்பட்ட உணர்வுபூர்வமான புகைப்படத் தொகுப்பை அடிப்படையாக கொண்ட கண்காட்சியாகும். கடந்த பத்து வருடங்களில் அதன் ஆசிரியபீட பணியாளர்கள் எடுத்த புகைப்படங்கள் மற்றும் விகல்ப தளத்தில் வெளியான புகைப்படங்களுள் பெரும் வரவேற்பை பெற்ற புகைப்படங்களை வெளியிடுவதும் அதன் சூழமைவை சுட்டிக்காட்டுவதும் இந்தக் கண்காட்சியின் நோக்கம்.
எனினும், கண்டியின் பேராதனை பல்கலைக்கழகம் இந்தக் கண்காட்சிக்குத் தடைவிதித்துள்ளது.

Unframed என்ற இந்தக் கண்காட்சி கடந்த காலங்களில் கொழும்பு, நீர்கொழும்பு அனுராதபுரம் மற்றும் மாத்தறையில் காட்சிப்படுத்தப்பட்டது. ஒக்டோபர் 16 முதல் 18 வரை இடம்பெறவிருந்த பேராதனை பல்கலைகழகத்தின் “எனது நாடு விழித்துக்கொள்ளட்டும்” (මාගේ දේශය අවදි කරනු මැන) என்ற  இலக்கிய விழாவின் ஒரு பகுதியாக இந்தக் கண்காட்சி இடம்பெறவிருந்தது. பேராதனை பல்கலைகழகத்தின் மாணவா் இலக்கி உப குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

எனினும், 15ஆம் திகதி முதல் இந்தக் கண்காட்சிக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டும் கருத்துக்களும் உள்ளடக்கங்களும் வெளியாகத் தொடங்கின. கண்காட்சிக்கு எதிராகவும் விகல்ப மற்றும் அதன் ஆசிரியர் சம்பத் சமரக்கோனிற்கு எதிராகவும்  மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. பேராதனை பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டாளர்கள் கண்காட்சி ஆரம்பமாகவிருந்த தினமான 16ஆம் திகதியே அதனை இடைநிறுத்த தீர்மானித்தனர். அன்றைய தினமே மாலை ஐந்து மணிக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பெருமளவு மாணவர்கள் கலந்துகொண்டனர். ஏற்பாட்டாளர்களான பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் இலக்கிய உப குழுவினரும் இந்தக் கலந்துரையாடலிற்குத் தலைமை தாங்கினர்.

குறிப்பிட்ட கண்காட்சி அரசசார்பற்ற அமைப்பொன்றிற்கு ஆதரவானது எனத் தெரிவித்த மாணவர்கள் குழுவொன்று, கண்காட்சி இடம்பெறக்கூடாது என கருத்துத் தெரிவித்தது. மேலும், இவர்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவை, விகல்ப விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானது என

தெரிவித்திருந்தனர். கண்காட்சியில் தமிழர்களின் பல புகைப்படங்கள் காணப்பட்டதே இதற்குக் காரணம்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமலாக்கப்பட வேண்டியவர்தான் என்று கூறிய அவர்கள், அவரின் படமும் காண்காட்சியில் காண்பிக்கப்படுவதால் இந்தக் கண்காட்சிக்கு இடமளிக்ககூடாது எனவும் தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் இடம்பெற்றுள்ள நில ஆக்கிரமிப்புகளையும் – தனியார் நிலங்களை அரசாங்கம் ஆக்கிரமிப்பதையும் மாணவர்கள் குழுவொன்று நிராகரித்தது. அரசியல் கைதிகளைக் காண்பிக்கும் புகைப்படங்கள் உண்மையில் விடுதலைப் புலிகளின் புகைப்படங்கள் எனத் தெரிவித்த அவர்கள், இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள சிங்களவர்களே பல்கலைக்கழகத்திலும் பெரும்பான்மையாக உள்ளனர் என தெரிவித்தனர். தமிழ் முஸ்லிம்களுடன் தாங்கள் சிறந்த சகவாழ்வை கொண்டிருப்பதாக தெரிவித்த அவர்கள், இந்த விடயம் குறித்து இதற்கு மேல் விவாதிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

எனினும், ஏற்பாட்டாளர்கள் இந்த நிகழ்வை தடைசெய்வது தணிக்கை செய்வதற்கு சமமானது என தெரிவித்தனர். இந்தப் புகைப்படங்கள் இந்த விவகாரங்கள் குறித்த கலந்துரையாடல்களுக்கும் விவாதங்களுக்கும் கருத்துப்பரிமாற்றங்களுக்கும் வழிவகுக்கும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். எனினும், இந்தக் கண்காட்சியை எதிர்த்த மாணவர்கள் குழுவொன்று சீற்றமடைந்ததாகவும் சகிப்புத் தன்மையற்றதாகவும் காணப்பட்டது, அவர்கள் தாங்கள் கண்காட்சியை நடத்த அனுமதிக்கப்போவதில்லை என வாதாடினர்.

கண்காட்சியைத் தடுக்கவும் தடைசெய்யவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் குழுவொன்று மேற்கொண்டுள்ள முயற்சிகள் – குறிப்பாக அவர்கள் செயற்பட்ட விதம் கருத்து சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கருதுகின்றது. விமர்சன அடிப்படையில் சிந்திக்கக் கூடிய கல்விமான்களையும் அறிஞர்களையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கல்வி முறையை முன்னெடுக்கும் அமைப்பிற்குள் இவ்வாறான மனோநிலை வளர்ச்சியடைவது நகைப்பிற்குரிய துயரமானது.

பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் தெற்கிலும் வடக்கிலும் கருத்து சுதந்திரமும், ஊடகங்களை விமர்சனத்துடன் அணுகும்போக்கும், தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத விவரணங்களை ஏற்க மறுப்பதும் அச்சுறுத்தலிற்குள்ளாகியுள்ள தருணத்தில் விகல்பவின் செயற்பாட்டாளர்கள் கண்காட்சி தொடர்பில் பேராதனையில் நெருக்கடிகளை சந்தித்துள்ளனர் என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டுகின்றது, கண்காட்சியை தடை செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கண்காட்சிக்கு அப்பால் யுத்தத்திற்கு பிந்திய நிலைமாறுகால நடைமுறை மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியன என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கருதுகின்றது.

நீதி சமத்துவம் போன்றவை இன்னமும் கிட்டாமலுள்ள சகபிரஜைகளின் வாழ்க்கையை வெளிப்படுத்துவதே கண்காட்சியின் நோக்கம். இந்தக் கண்காட்சி மறைந்துள்ள, மறக்கப்பட்டுவிட்டு, யதார்த்தங்களை வெளிப்படுத்துகின்றது. பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் சிலரின் நடவடிக்கைகள் முன்னோடி நடவடிக்கையாக அமைந்துள்ளதுடன்,

தற்காலிக அரசியலையும் யுத்தத்திற்குப் பிந்திய யதார்த்தங்களையும் விமர்சனத்துடன் அணுகவேண்டும் என்ற கருத்தை முன்வைப்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தக்கூடியவையாகவும் காணப்படுகின்றது.

பலவீனப்படுத்தும், குழப்பமான தாராளவாதத்தை சகிப்புத்தன்மையின்மையை வெளிப்படுத்துபவர்களால் கண்காட்சி தடுக்கப்பட்டதை எந்தவித தயக்கமுமின்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கண்டிக்கும் அதேவேளை உரிய அதிகாரிகள் இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றது. மேலும், பேராதனை பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இது குறித்து ஆழமாக விவாதிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றது.